

# தமிழ் வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண்-46

### புதிய அறிவிப்புகள்
### 2011 - 2012

## தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
## மற்றும்
## செய்தித்துறை

# தமிழ் வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் 46**

## 2011 – 2012 ஆம் ஆண்டிற்கான
# அறிவிப்புகள்

தமிழ்நாடு அரசு
2011

## 1. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி உயர்த்தி வழங்கப்படும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் தற்போது மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் ஒய்வூதியம் ரூ.1,000 த்திலிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். ஒய்வூதியம் உயர்த்தப்படுவதால் ஆண்டொன்றுக்கு ரூ.30.90 இலட்சத்துடன் கூடுதலாக ரூ. 35.00 இலட்சம் செலவாகும்.

## 2. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுத் தொகைகள் உயர்த்தி வழங்கப்படும்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு வழங்கும் திட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் வழங்கப்பட்டு வந்த

முதல் பரிசு ரூ. 1,000 –– ரூ. 10,000 ஆகவும்
2ஆம் பரிசு ரூ. 500 –– ரூ. 7,000 ஆகவும்
உயர்த்தப்படும்.

கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் வழங்கப்படும் ஒரே பரிசுத் தொகையான ரூ.1000 இனி ரூ. 10000 ஆகவும், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி புதிதாக இரண்டாம் பரிசு ரூ. 7,000மும் வழங்கப்படும்.

பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் இதுவரை வழங்கப்பட்டு வந்த

முதல் பரிசு ரூ.5,000 த்திலிருந்து ரூ.15,000 ஆகவும்

2 ஆம் பரிசு ரூ.3,000 த்திலிருந்து ரூ.12,000 ஆகவும்

3 ஆம் பரிசு ரூ.2,000 த்திலிருந்து ரூ.10,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இதே போன்று கல்லூரி மாணவர்களுக்கு இதுவரை மாநில அளவில் வழங்கப்பட்டு வந்த

முதல் பரிசு ரூ. **5,000** த்திலிருந்து ரூ.**15,000** ஆகவும்

**2** ஆம் பரிசு ரூ. **3,000** த்திலிருந்து ரூ.**12,000** ஆகவும்

**3** ஆம் பரிசு ரூ. **2,000** த்திலிருந்து ரூ.**10,000** ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ.**5.96** இலட்சத்துடன் அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ. **38.40** இலட்சம் செலவாகும்.

## 3. புகழ்பெற்ற தமிழ் இலக்கியங்கள் அரேபிய மொழியில் மொழி பெயர்க்கப்படும்

புகழ்பெற்ற தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழி பெயர்த்து உலகமெலாம் தமிழோசை பரவச் செய்யும் நோக்கில் முதற்கட்டமாகத் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் படைப்புகளை அரேபிய மொழியில் மொழி பெயர்த்து நூல்களாகவும், இணையத்திலும் வெளியிடுவதற்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.20.00 இலட்சம் வழங்கப்படும்.

## 4. புகழ்பெற்ற தமிழ் இலக்கியங்கள் சீன மொழியில் மொழி பெயர்க்கப்படும்

அரேபிய மொழியில் மட்டுமின்றி, திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் படைப்புகளைச் சீன மொழியிலும் மொழிபெயர்த்து நூல்களாகவும், இணையத்திலும் வெளியிடுவதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.60.00இலட்சம் வீதம் 5 ஆண்டுகளுக்கு ரூ.3.00கோடி வழங்கப்படும்.

" இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மொழி, தனது சீரிளமை குன்றாமல், அதே தனிப் பண்புகளுடன் திகழ இன்றைய வளரும் தலைமுறை உறுதி ஏற்க வேண்டும். "

**புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்